பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 கார்த்திகை 14 ஜுலஹஜ் 18 இதழ் 291
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 1-12-77

## சர்வாதிகார ஆட்சிக்கு முயற்சிக்கின்றனர்- சிறிமாவோ குற்றச்சாட்டு

[கொழும்பு]

''அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டுவருவதன்மூலம், இந்தநாட்டில் சர்வாதிகார ஆட்சி ஒன்றினை ஏற்படுத்த ஐக்கிய தேசியக்கட்சியினர் முயன்றுவருகின்றனர்.''

இவ்வாறு கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார். மேலும் அவர் கூறியதாவது:

''4 மாதத்திற்குள் மக்களின் அதிருப்தியைப் பெற்றதொரு அரசை நான் இதுவரையில் காணவில்லை, மக்கள் இந்த அரசாங்கத்தின்மீது அதிருப்தி அடைந்துள்ளனர் என்பதற்கு இங்கு கூடியுள்ள மக்களே சாட்சி.

''மக்கள் எங்கள் செல்வம் என்று முதலைக் கண்ணீர்விட்டவர்கள், ஏழைமக்களை வாழ வைப்போம் என்றவர்கள், இன்று ஏழைகளின் வயிற்றிலடிக்கிறார்கள்! கடந்தகால அரசுதான் அரசியலில் குடும்ப ஆதிக்கம் நடத்தியது என்று குற்றம்சாட்டியவர்கள் இன்று அதேநடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம் என்றவர்கள், எமது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நியமனங்களை நிறுத்திவிட்டு புதிதாக நியமனங்கள் வழங்குகின்றார்கள். இதுதான் அவர்களது வேலைவாய்ப்பு''.

திரு. அனுரா பண்டாரநாயக்கா பேசுகையில்; ''இவர்கள் உண்மையான ஜனநாயகவாதிகள் என்றால், இக்கூட்டத்தின் பேச்சுக்களை வானொலியில் ஒலிபரப்புவார்களா? மோதல் என்றால் நாமும் எதிர் மோதலுக்கு தயார்'' என்று கூறிவிட்டு;

''அரசாங்கத்தில் அலிபாபாவும் நாற்பது திருடர்களும் தான் இருக்கின்றார்கள்'' என்றார். (ம)

## கைதடி, கிளிநொச்சி

# அகதிகள் முகாமுக்கு அதிகாரிகள் திடீர்விஜயம்

(யாழ்ப்பாணம்)

**கொழும்பிலிருந்து நேற்று இங்கு வந்த உயர் அதிகாரிகள்குழுவொன்று, கைதடி,கிளிநொச்சியிலுள்ள இரண்டு அகதிகள் முகாம்களுக்கும்திடீர் விஜயம் செய்தது!**

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு வடக்கே வந்து, அகதி முகாம்களில் தங்கியிருந்தவர்கள் போனவர்கள் போக, எஞ்சியிருப்பவர்களின் நிலைமை பற்றி நேரில் ஆராய்வதற்காக வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர் திரு. பி. கே. திலநாயகா, சமூக சேவைகள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு மகேசன், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டதிகாரி திரு. நியூட்டன் சமரசிங்கா ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து,கைதடியிலும் கிளிநொச்சியிலுமுள்ள முகாம்களிலுள்ள அகதிகளைப் பார்வையிட்டு அவர்களின் நிலைமையை நேரில் கேட்டு அறிந்தனர்.

இவர்களுடன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. எம். விஜயபாலா மற்றும் சமூக சேவைப்பகுதியினரும் சென்றிருந்தனர்.

அகதிகள் முகாம்களை மூடிவிடுவதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தைத் தொடர்ந்து தற்போது இந்த இரு முகாம்களிலும் எஞ்சியுள்ள அகதிகளுக்கு எவ்வித நிவாரணம் அளிப்பது என்பதுபற்றி ஆராயும் பொருட்டே இவர்கள் இங்குவந்ததாகத் தெரியவருகிறது.

இந்த முகாம்களிலுள்ள இலங்கையர்களைக் குடியமர்த்துவதற்கும் இலங்கையரல்லாதவர்களை வேறு தனியார்காணிகளில் குடியமர்த்துவதற்குமான யோசனைகள் நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது.

இந்த அதிகாரிகள் ... நேற்று இந்த முகாம்களைப் பார்வையிடுவதற்கு வருவது பற்றி இப்பகுதிப் பேரவை உறுப்பினர் எவருக்கும் அறிவிக்கப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

ஆகஸ்ட் கலவர அகதிகள்

## 200 குடும்பங்களுக்கே அரசு காணி வழங்கியுள்ளதாம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள அகதிகளில் காணிபெறத் தகுதியுள்ள 356 இலங்கைப் பிரஜைகளான குடும்பங்கள் இருந்தும் 200 குடும்பங்களுக்கே அரசு காணி வழங்கியிருப்பதாக அகதிகள் புனர்வாழ்வுக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

காணிபெறத் தகுதியுள்ள மிகுதியான 156 குடும்பங்கள் தொடர்ந்து அகதிகள் முகாமிலேயே இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர்.

நாளை விஸ்வமடுவில் அரசு நிலங்களில், அகதிகள் குடியேற்றப்படவிருக்கின்றார்கள்.

பளை முகாமிலுள்ள அகதிகள் கைதடி முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிச் சந்தை முகாமில் 1700 அகதிகளும் அக்கராயன் முகாமில் 400 அகதிகளும், இராமநாதபுரத்தில்320 அகதிகளும் இருப்பதாக அகதிகள் முகாம் பொறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையரல்லாத அகதிகளுக்கு மீண்டும் அவர்களின் பழைய இடங்களுக்குச் செல்ல சமூகசேவை இலாகா 350 ரூபா வீதம் கொடுத்துவருகிறது. அச்சம் காரணமாகப் பழைய இடங்களுக்குச் செல்ல விரும்பாத அகதிகளை தனிப்பட்டவர்களின் காணிகளில் குடியேற்றுவதற்கு புனர்வாழ்வுச் சபை ஒழுங்குசெய்து வருவதாகத் தெரிகிறது, (க-அ)

## போதிய உணவுஇல்லைஎன்று அகதிகள் முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

நேற்றுப் பிற்பகல் கைதடி அகதிகள் முகாமுக்கு உயர்அதிகாரிகள் விஜயம் செய்தபோது அகதிகள் பலர் தங்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் பற்றிக் கூறியதாகத் தெரியவருகிறது.

''இங்கு எமக்குப் போதிய உணவு வழங்கப்படுவதில்லை. முன்னர் ஒருநாளைக்கு ஒரு நேரம் மட்டுமே எமக்கு தேநீர் வழங்கப்பட்டது. இப்போது அதுவும் இல்லை. எங்களின் கஷ்டங்களைத் தீர்க்கமாட்டீர்களா......?'' என்று அகதிகள் அதிகாரிகளிடம் முறையிட்டதாக அகதிகள் முகாமைச் சேர்ந்த தொண்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்,

முகாம்களில் மேற்கொண்டு அகதிகளைச் சேர்க்கவேண்டாம் என்றும், கைதடி, கிளிநொச்சியில் மட்டுமே அகதிகள் முகாம்கள் செயல்படும் என்றும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

## பேரவையில் சிந்தியவை

அனுரா: பட்ஜட்மூலம் மக்களைக் கொன்றுவது நோயைக் குணப்படுத்துவார்கள் என்று மக்கள் நினைக்கின்றார்கள். ஆனால் நான் நினைக்கின்றேன், பட்ஜட் யோசனைகள் வைத்தியரையே முடித்துவிடும்!

பிரேமதாச: ... நாயக்க குடும்பத்தினால் என்னைக் கொல்ல முடியாது.

அனுரா: நான் ஏன் உம்மைச் சாகடிக்கவேண்டும். நீர்தான், உம்மையும் கொன்று யு. என். பியையும் கொலைசெய்யப் போகின்றீர்!

ஒருகுரல்: நீர் ஒரு நல்ல நடிகர்!

அனுரா: அரசியல்வாதிகள் எல்லோருமே நடிகர்கள்தான். உங்கள் நடிப்பில் ஏமாற்றமடைந்த மக்கள் 1983-ல் நல்ல தீர்ப்பு அளிப்பார்கள்.

ஒரு குரல்: என். எம். முடன் நீர் கிரிக்கெட் விளையாடினீரா?

அனுரா: அந்த ஆட்டத்தில் நான் அவரைத் தோற்கடித்தேன்!

அனுரா: மீனவர்களுக்கு வலைகள் கிடைக்க உதவிசெய்யவேண்டும்!

ஒரு குரல்: உமது வலையில் எத்தனை மீன்கள் அகப்பட்டன?

அனுரா: நிறையப்பிடிபட்டது!

லலித் அத்துலத்முதலி: தமிழ் ஈழம் அமைக்தாலும், நீங்களேஆட்சி ஏற்றாலும் அந்நிய உதவிகள் தேவைதானே?

துரைரத்தினம்: தமிழ் ஈழம் அமைத்தால், ஆண்டுதோறும் உங்களுக்கு 25 லட்சம் ரூபா கடன் தருவோம்

லலித்: அதற்குப் பதிலாக நாம் மகாவலி தண்ணீர் தருவோம்.

துரைரத்தினம்: எங்களது தேவைகளை விஞ்ஞான ரீதியில் நாமே பூர்த்திசெய்வோம்.

ஷெல்டன் ஜெயசிங்கா: அந்த சிவந்த அழகி எங்கே?

ஒரு குரல்: அவர் பூங்காவுக்குப் போய்விட்டார். பூங்காக்களைத் தான் அவர்கள் நாடுகின்றார்கள். (ம)

## இறுதிநாள் விவாதம்

(கொழும்பு)

பட்ஜட்மீது இன்றுகாலை தேசிய அரசுப்பேரவையில் இறுதிநாள் விவாதம் நடைபெறும். (ம)

## 3,87,896 வீடுகள் சேதம்!

சென்னை, நவ. 30

தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக இறந்தோரின் எண்ணிக்கை 519 ஆக அதிகரித்திருப்பதாக இன்று மாலை அறிவிக்கப்பட்டது 183 பேரைக் காணவில்லை.

தமிழ்நாட்டில் மட்டும் மொத்தம் 3 லட்சத்து 87 896 வீடுகள் முற்றாக அழிந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# வாசுதேவா நாளை யாழ். வருகிறார்

[யாழ்ப்பாணம்]

சமசமாஜக் கட்சிப் புரட்சிக் குழுத் தலைவர் திரு.வாசுதேவா நாணயக்காரா நாளை யாழ்ப்பாணம் வருகிறார்.

இவர் வடபகுதியிலுள்ள இடது சாரிக் கட்சித் தலைவர்களுடனும், கூட்டணி எம். பிக்களி, தமிழ் இளைஞர் பேரவையினருடனும் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

நாளைக் காலை 9 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் வாசுதேவா உரையாற்றுவார். நாளை பிற்பகல், கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை சம்பந்தமாக, இவர் கட்சி உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தவிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

3-ம் திகதி காலை கம்யூனிஸ்ட் தலைவர்களான திரு. வி. பொன்னம்பலம், திரு. அ. வைத்திலிங்கம் ஆகியோருடனும் தமிழ் இளைஞர் பேரவையினருடனும் வாசுதேவா தனித்தனியே சந்தித்து பேசுவார்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை இல்லத்தில் கூட்டணிஎம். பிக்களை வாசுதேவா சந்தித்து உரையாடுவார்.

சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஆதரித்து இடம்பெறும் பொதுக் கூட்டத்தில் திரு வாசுதேவா கலந்து கொள்வார் இக்கூட்டத்திற்குதிரு. வி பொன்னம்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

மூன்று படுக்கை அறைகளைக்கொண்ட நவீன வசதிகளையுடைய வீடு உடனடியாகத் தேவை. சுண்டிக்குளி, செட்டித்தெரு கோவில் வீதி, நாவலர் வீதி, நல்லூர் குறுக்கு வீதி, கந்தர்மடம், திருநெல்வேலி விரும்பத்தக்கது. பேராசிரியர் சோ. செல்வநாயகம், 104, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 7795

கோது நீக்கிய இலுப்பம் பருப்பு தேவை 1 ருத். 1-50 சதமாக எடுக்கப்படும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், த. பெ. இல. 77, யாழ்ப்பாணம். 7794

அனுபவமுள்ள கொம்பசிற்றர், மெசின் மயின்டர்கள் தேவை. தொடர்பு கொள்க: சந்திரா அச்சகம், காங்கேசன்துறை. 7796

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும் வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

### விற்பனைக்கு

நாஷனல் பனசோனிக் கசற்/ரேடியோ மொடல் R 5410, சானியோ ஸ்ரீறியோ (Three in one) மொடல் G 2615 H, காருக்கு உரிய சானியோ ஸ்ரீறியோ கசற்/ரேடியோ இரண்டு ஸ்பீக்கர், 4 பாண்ட் மொடல் FT 4033, விற்பனைக்குண்டு. எல்லாம் புத்தம் புதியன. விபரங்களுக்கு: இல. 14, கச்சேரி, கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். 7797


# திருக்குடும்ப மாணவியரின் சுகாதாரப் பொருட்காட்சி

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட எச். எஸ். ஸி. இ வகுப்பு மாணவிகளின் சுகாதார தின நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாக அமைந்த பொருட்காட்சி சித்தை கவர்ந்ததுடன் சிந்தனையையும் வளர்க்கும் அருமையான கண்காட்சியாக அமைந்திருந்தது.

வாயிலிலே வாழைமரங்கள்-வழியெங்கும் மகரதோரணங்கள்-விழி நிறைந்த ஆவலுடன் வளவினிலே நிறைந்திருந்தனர் கல்லூரி மாணவிகள். சரியாக பத்துமணி - மகேஸ்வரஐயரின் கைகள் பளபளக்கும் குத்து விளக்கின் திரிகளுக்கு ஒளியேற்றிவைத்தன. கூடவே கல்லூரி அதிபரும் மங்கலவிளக்கேற்றும் பணியினில் இணைந்து கொண்டார். வைபவத்தைச் சிறப்பிக்கவென யாழ் நகரின் பிரபல்யமான டாக்டர்கள் பலர் அங்கு வருகை தந்திருந்தனர். மகேஸ்வரஐயர் தமது தலைமையுரையில் இத்தகைய செயல்திட்டங்கள் கல்லூரியுடன் முடிவடைவதில்லையெனவும் மாணவிகளின் மனதில் நிலைத்துநின்று வாழ்க்கைக்கு நிறைந்த பயனை விளைக்குமெனவும் மாணவிகளின் சமூக அறிவை வளர்க்குமெனவும் கூறினர். இதனை அடுத்துச் சம்பிரதாயபூர்வமாகப் பொருட்காட்சி மண்டப நுழைவாயின் நாடாவை மகேஸ்வர ஐயர் வெட்டிகண்காட்சியைத் திறந்துவைத்தார். மாணவிகளிடையே மகிழ்ச்சிவெள்ளம் கரைபுரண்டது. அணை கடந்த வெள்ளமென ஆர்வமிகுதியுடன் பிரமுகர்களின் பின்னல் மண்டபத்துள் அவர்கள் பிரவேசித்தனர். கண்காட்சிமண்டபத்துள் அமைந்திருந்த காட்சிப்பொருட்கள் 'அருமை உடலின் நலமெல்லாம் அடையும் வழிகள் அறிவாயே - வருமுன் நோயைக் காப்பாயே வையம்புகழ வாழ்வாயே'' எனக்கூறி எம்மை வரவேற்றன.

நாட்டில் சாதாரணமாகக் காணப்படும் பலவகை நோய்களைப் பற்றிய நிறைந்த விளக்கங்களையும் அவற்றைத் தடுக்கும் வழிகள் பற்றிய சிறந்த ஆலோசனைகளையும் மாணவிகள் மலர்ந்தமுகத்துடன் கண்காட்சி பொருட்கள் மூலம் தெளிவாக்கினர். தண்ணீரை குடிசைகளில் சுத்தமாக்கக் கூடிய அமைப்புமுறையொன்றை மாணவிகளே மண்பானைகளைக் கொண்டு அமைத்து வைத்திருந்தனர். சுகாதாரமுறையாக அமைந்த வீடுகளின் மாதிரிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இக்கல்லூரி மாணவிகள் வெறும்கண்காட்சி நடத்துவதுடன் நின்றுவிடாது 31 கிணறுகளுக்குக் குளோரின் தெளித்து 20 வீடுகளுக்கு டீ. டீ. ரி. தெளித்து, 27 வீடுகளுக்கு முக்கூட்டுத் தடுப்பூசி போட்டு-22 வீடுகளுக்குப் பல் சிகிச்சை அளித்து செயலிலும் சாதனைசெய்துள்ளார்கள் என்பதை அங்கு வைக்கப்பட்டிருந்த வரைபுகளால் அறிந்து கொள்ளக் கூடியதாயிருந்தது.

சுகாதாரக் கண்காட்சிக்கு மேலும் மெருகு ஊட்டக்கூடிய வகையில் கைப்பணிக்காட்சிப் பொருட்கள் அமைந்திருந்தன. பனம் விதையில் அமைக்கப்பட்ட வண்டு முட்டையில் அமைக்கப்பட்ட முயல், நீல் கட்டையில் அமைக்கப்பட்ட பொம்மை, தென்னைமட்டையில் செய்யப்பட்ட மீன் போன்ற பல காட்சிப்பொருட்கள் கருத்தைக் கவர்ந்தன.

மொத்தத்தில் திருக்குடும்ப மாணவிகளின் இப்பொருட்காட்சி பார்ப்பவர் மனதில் பெரும் மகிழ்வை ஏற்படுத்தி சுகவாழ்வுக்கு அடித்தளமிடும் அருமையான நிகழ்ச்சியாக அமைந்து காணப்பட்டது.

—பற்றிமாகரன்


அமரர் எட்வேட் நவரத்தினசிங்கம் J.P.

இறைபதமெய்திய இரண்டாவதாண்டு

நினைவாஞ்சலி

1-12-77



ஆண்டுகள் இரண்டு அகன்றன வாயினும் ஈண்டு எந்தை இருப்பதை உணர்த்த மாண்ட நின்சேவை மறந்திடா அன்பர் யாண்டும் வேண்டுவர் ஆண்டவரிடமே

இங்ஙனம் பிரிவின்துயரால் வருந்தும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்.

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. 7792


# யாழ். பெரியாஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு
## நோயாளர் அவதி

[யாழ்ப்பாணம்]

யாழ். வைத்தியசாலையில், மருந்துவகைகள் இல்லையென திருப்பியனுப்பும் சம்பவங்கள் தினமும் நடைபெற்றுவருகின்றன இதனால் நோயாளிகள் தினமும் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம். எஸ். பீன்பில்லா என்பவர் வயிற்றுவலி காரணமாக நீண்டநேரம் கியூவில் நின்று, டாக்டர்கள் மூலம் ''அன்ரிப்பார்'' மருந்துக்கு துண்டு எழுதிவந்தபின்னர் மருந்து இல்லை என்றார்களாம். மூன்று தடவைகள் பீன்பில்லா மருந்தில்லையெனத் திருப்பியனுப்பப்பட்டாராம்.

இவற்றைப் போல, கர்ப்பிணித்தாய்மார்களையும் கடும் நோயாளர்களையும், தேவையான மருந்துகள் இல்லையென மருந்தாளர்கள் திருப்பியனுப்பு கிறார்களாம்.

இதுவிஷயமாக சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியாவை கோப்பாய் தேசிய பேரவை உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தந்திமூலம் நிவாரணமளிக்கும்படி கோரியிருந்தும் இதுவரை அமைச்சர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனத் தெரியவருகிறது. (கெ.அ)

# திருட்டு முயற்சி: பாதுகாப்புச் சேவையினர் முறியடித்தனர்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் உள்ள கடை ஒன்றை உடைத்துத் திருட முயன்ற கோஷ்டி ஒன்றின் முயற்சி தக்க சமயத்தில் பாதுகாப்புச் சேவையினரால் முறியடிக்கப்பட்டது. எனினும் திருடர்கள் உடல் முழுவதும் எண்ணை பூசி வந்தமையால் அவர்களைப் பிடித்துக்கொள்ள முடியவில்லையாம்.

இம்முயற்சியினால் தமது கடை காப்பாற்றப்பட்டதனால் இக்கடை உரிமையாளர் பாதுகாப்புச்சேவையினருக்கு சன்மானம் கொடுத்தார்.

இம்மர்மக் கோஷ்டி இலக்கத்தகடு இல்லாத கார் ஒன்றில் திரிவதாகக் கூறப்படுகிறது. (கா-உ)

...

# கொள்ளை லாபம்? இருவர் பிணையில்

(சங்கானை)

கட்டுப்பாட்டு விலையிலுள்ள பங்கீட்டு உப உணவுப் பொருட்களை அதிக விலைக்கு விற்றதாகக் கூறப்படும் இரு வியாபாரிகள் பொலிசாரிடம் மாட்டிக்கொண்ட சம்பவங்கள் பண்டத்தரிப்பிலும் சங்கானையிலும் இடம் பெற்றுள்ளன.

உணவுப் பொருட்களைப் பதுக்கிவைத்தும், வைத்துக்கொண்டு விற்க மறுப்பவர்கள் மீதும், கட்டுப்பாட்டுவிலையை மீறி கொள்ளை லாபம் அடிப்போர்மீதும் பொலிசார் தமக்குக் கிடைத்த புகாரைத் தொடர்ந்து சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் திரு ஷரத் சில்வா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி பண்டத்தரிப்பில் கட்டுப்பாட்டு விலை ரூபா 1-48 ஆக இருந்த மல்லி ஒரு ருத்தலை 4 ரூபாவாக விற்றதாகப் பிடித்துள்ளனராம்.

இதைத் தொடர்ந்து சங்கானையில், கட்டுப்பாட்டு விலை 3 ரூபாவாக இருந்த கடலைப் பருப்பை ருத்தல் ஒன்று, 4 ரூபா 50 சதமாக விற்றதாக வர்த்தகர் ஒருவரையும் பிடித்தனராம்.

இருவரையும் மல்லாகம் நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினம் பிணையில் செல்ல அனுமதித்தார். [உ]

# ரூபா 2 கோடி 50 லட்சம் உரம் அன்பளிப்பு

[கொழும்பு]

உலக உணவு ஸ்தாபனம் இலங்கைக்கு 2 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான உரத்தைஅன்பளிப்பாக வழங்க உள்ளது.

காணி விவசாய அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயகா அண்மையில் இந்த ஸ்தாபனத்தின் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இந்த அன்பளிப்பு வழங்கப்படுகிறது. [இ]

# பழுதான விதை உருளைக்கிழங்கு

(சங்கானை)

வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கில் சிறிது பழுதடைந்தவைகள் திருநெல்வேலி அரசினர் விவசாய விஸ்தரிப்புநிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. (இ)

# பூநகரி நூலகம் மீண்டும் இயங்கும்

[பூநகரி]

பூநகரி கிராமாட்சி மன்றம் கலைக்கப்பட்ட பின்னர் திரு. ஆ. குணநாகம் (உதவி அரசாங்க அதிபர்) கிராமாட்சி மன்ற நிர்வாகஸ்தராக பொறுப்பேற்றதனை யடுத்து இயங்காமலிருந்த நூலகத்தை சிறந்த முறையில் இயங்க நடவடிக்கையெடுத்துள்ளார். இவ்நூலகத்தை மக்கள் நலன்கருதி வேறு ஓர் இடத்தில் கட்டம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அவர் ஆலோசித்திருக்கின்றார்.

பூநகரிக்கிராமாட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் கூடிய விலைகொடுத்து வாங்கும் மீன்வகைகளை குறைந்தவிலையில் விற்பதற்கு (ருத்தல் வீதம்) மீனவர்களை அழைத்து ஓர் ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை கிராமாட்சி மன்ற மண்டபத்தில் கூட்டஒழுங்குகள் அவர் செய்துள்ளார் [உ]

# நீரொழுக்கு இல்லை

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. சு. கந்தையா எழுதுவதாவது:

23-11-77 திகதி வெளியாகிய 'ஈழநாடு' 2ம் பக்கத்தில் வீரசிங்கம் மண்டபத்தைச் சேர்ந்த நான்காம் மாடியில் மழைநீர் ஒழுகித்தேங்கி நிற்பதால் அங்குள்ள அரசாங்க அலுவலக ஊழியர்கள் வேலைசெய்யமுடியாது அவதிப்படுகிறார்கள் என்ற கருத்துப்பட ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இச் செய்தி முழுவதும் தவறானது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கூட்டுறவாளர்களின் அரிய முயற்சியால் நிறுவப்பட்ட மேற்படி கட்டிடம்வட பகுதிக்கு வாய்த்த அரிய சொத்தெனப் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து சிறந்தமுறையிலே அவர்களுக்குப் பயன்பட்டு வருவதோடு செவ்வனே எம்மால் பேணப்பட்டும் வருகின்றது என்பதை யாவரும் அறிவர். [அ]

# நத்தார் இசைஆராதனை

[யாழ்ப்பாணம்]

கைதடி நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலை வருடாந்த நத்தார் இசை ஆராதனை இம்மாதம் 3ம் திகதி சனிக்கிழமை பாடசாலையில் நடைபெறும். [இ]


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

(இறந்தவர்) கொக்குவில் மேற்கு சண்முகம் வேலுப்பிள்ளை சண்முகம்பிள்ளை

வாதி

காலஞ்சென்ற கொக்குவில் மேற்கு சண்முகம் வேலுப்பிள்ளையின் மரணசாதன தத்துவ காரணுக யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டு தத்துவ வழக்கு இல/2749ல் நியமிக்கப்பட்ட டாக்டர் இராசரத்தினம் அருள்பிரகாசம்.

பதில் வாதிகள்

இல. ஈ3/10959

எதிராக

யாழ்ப்பாணம் பெரியகடை மலேயன்கபே முத்துக்குமாரு குழந்தைவேலு கதிரவேலு.

பிரதிவாதி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B/10959-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி (14-12-1977) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 29,780/-ம் 16-7-1969 தொடக்கம் 8-6-1970 வரைக்கும் ரூபா 20,000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 841/65 இதில் ரூபா 7158/35 தீர்வையாலும் ரூபா 841/65 செலவாலும் கொடுபட்டுள்ளது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை ''அணிஞ்சிலடியும் பாதிசித்திடலும்'' நில. பர. 1 குளி 4 27/32 வீடும் கிணறும் ''Y'' என்று அடையாளமிட்டு கிழக்கேயிருக்கும் கையொழுங்கைக்குப் போவதற்காகப் பொதுவாக விடப்பட்ட V. Cயில் உரிமையும் எல்லை கிழக்கு குருசாமிச்செட்டியார் நாகலிங்கம் செட்டி பெண் ஆச்சிக்கண்ணம்மாவினுதனம், வடக்கு பொதுவாக விடப்பட்ட ''Y'' என்னும் பாதையும் காதர் மொகிதீன் பெண் கதியும்மாவினுதனமும். மேற்கு சொல்லப்பட்ட கதியும்மாவுக்கும் சுல்தான் சிக்கத்தருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு சுல்தான் சிக்கத்தருக்குமுரிய ஆதனமும் ரோட்டும் இடங்களும்.

(க சிவஸ்கந்தா)

நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்.

நாகேந்திரமடம், வட்டுக்கோட்டை. 08-10-1977. 7791

# 'தமிழ் அண்ணா', 'தமிழ்ப் பெரியார்'

## தி. மு. க. வாங்கிய இரு கப்பல்களையும் விற்க எம். ஜி. ஆர். அரசு முடிவு

சென்னை, நவ. 30
தமிழ்நாட்டில் முன்னர் தி. மு. க. அரசு வாங்கிய இரண்டு கப்பல்களையும் எம். ஜி. ஆர். அரசு விற்று விடமுடிவுசெய்துள்ளது.

இந்திய மாநிலங்களில் சொந்தக்கப்பல் போக்குவரத்து செய்த முதலாவது மாநிலம் எனப் பெயர்பெற்றிருந்த தமிழகத்திற்கு இன்றைய அரசின் இச் செயல் மிகுந்த அவமானத்தை ஏற்படுத்தும் என பொதுமக்களும்பத்திரிகைகளும் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

1975ம் ஆண்டு தமிழக அரசு நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு ''தமிழ்அண்ணா'' ''தமிழ்ப் பெரியார்'' என்ற இக் கப்பல்களை கொள்முதல் செய்திருந்தது தெரிந்ததே. (கெ-இ)

# நேர்முகப் பரீட்சை நிறுத்தப்பட்டது

(மாவிட்டபுரம்)
''எவ்விதகட்டுப்பாடுகளும் நிபந்தனைகளுமின்றி காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கூலியாட்களுக்கான நேர்முகப்பரீட்சைக்கு தலைமைப்பீடத்தின் சிபார்சின்பேரில் அனுப்பப்பட்ட 20 பேருக்கும் நேர்முகப்பரீட்சை நடத்தக்கூடாது என தொழிற்சங்கங்கள் ஒருமுகமாகக் கோரியதால் நேர் முகப்பரீட்சை நிறுத்தப்பட்டது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்குக் கூலியாட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக தொழிற்கந்தோரினால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர்களுக்கும் தொழிலாளர்களது பிள்ளைகளுக்கும் ஏற்கனவே நேர்முகப்பரீட்சை நடைபெற்றிருந்தது.

இந்நிலையில் சீமெந்துக்கூட்டுத்தாபனத்தலைவரின் சிபார்சுடன் எவ்வித கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளுமின்றி 20 பேர் கடந்த சனிக்கிழமை நேர்முகப்பரீட்சைக்காக தொழிற்சாலைக்கு வந்திருந்தனர்.

இதுகுறித்துத் தொழிற்சங்கப்பிரதிநிதிகள் இலங்கை சீமெந்துக்கூட்டுத் தாபனத் தலைவர். திரு அசோகா சோமரத்தினவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி இச்செயல் அநீதியானது எனக் கண்டித்துள்ளதுடன் காங்கேசன்துறைதொகுதிப் பிரதிநிதியும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு.அ. அமிர்தலிங்கத்திடமும் புகார் செய்துள்ளனர் (அ)

# கெய்ரோ மகாநாட்டில் ரஷ்யா கலந்து கொள்ளாது

மாஸ்கோ, நவ. 30
எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தின் கெய்ரோ மகாநாட்டில் சோவியத்யூனியன் கலந்துகொள்ளமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஜனுப் சதாத் விடுத்த வேண்டுகோளை சோவியத்யூனியன் நிராகரித்துள்ளது.

ஜெனிவா சமாதான மகாநாட்டை உடன் கூட்டுவதன் மூலம் மத்தியகிழக்குப் பிரச்னைக்கு தீர்வுகாணமுடியும் என்றும் இவ் வேளையில் கெய்ரோ மகாநாடு அவசியமில்லையென்றும் ரஷ்யா கருத்துத் தெரிவித்துள்ளது. (இ)

## எம். ஜி. ஆருக்கு கறுப்புக்கொடி

புதுடில்லி, நவ. 30
தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் டில்லியில் நடைபெறும் ''எக்ஸ்போ 77'' பொருட்காட்சியின் கலைநிகழ்ச்சி ஒன்றுக்கு தலைமை தாங்க வந்த பொழுது அவருக்கு கறுப்புக்கொடி காட்டப்பட்டது.

தமிழகத்தில் மக்கள் புயலால் செத்துமடிந்து கொண்டிருக்கும் நேரத்தில் இவ்வாறு உல்லாசமான நிகழ்ச்சிகளில் தமிழக முதல்வர் கலந்துகொள்வதை கண்டிக்கும்மூகமாகவே டில்லியில் உள்ள தமிழர்கள் இக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனரென அறிவிக்கப்படுகிறது. [கி. இ]

## லண்டனில் தமிழ் மாணவ பேரவை

லண்டன், நவ. 30
பிரிட்டனில் வாழும் தமிழ் மாணவர்களின் நலன்களை கவனிக்கும்பொருட்டு தமிழ் மாணவ பொதுப்பேரவை ஒன்று லண்டனில் உதயமாகிறது.

லண்டன் சரத்பால் தொழில்நுட்பக்கல்லூரி தமிழ் மாணவர்களின் முயற்சியால் உருவாகும் இப் பேரவையின் முதலாவது கூட்டம் பிரல்ரேட்டிலுள்ள எட்ரிச் மண்டபத்தில் நடைபெறும். தமிழ் மாணவர்களின் பல்வேறு பிரச்னைகளுக்கும் தீர்வு காண்பதே இவ்வமைப்பின் நோக்கமாக இருக்குமென அமைப்பாளர்களில் ஒருவர் தெரிவித்தார். (கி-இ)

# ''வெளிநாடுகளில் வேலை: தனியாரிடம் ஏமாறுதீர்''

## தொழிலமைச்சு எச்சரிக்கை

[கொழும்பு]
மத்தியகிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறி ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் பற்றியும், குழுக்கள்பற்றியும் ஏராளமான முறைப்பாடுகள் தொழில் அமைச்சுக்குக் கிடைத்திருக்கின்றன.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைபெற்றுத் தருவதாகக் கூறி இந்த ஏமாற்றுக்காரர்கள் ஆயிரக்கணக்கான ரூபாவை முற்பணமாக பொதுமக்களிடமிருந்து பெறுகிறுர்களாம். இவர்கள் தங்களை தொழில் அமைச்சர், பிரதியமைச்சர், மற்றும் அமைச்சரைச் சார்ந்தவர்களுடன் தாங்கள் நெடுங்காலமான தொடர்புடையவர்களென்றும் சொல்லிக் கொள்கிறுர்களாம்.

எந்தவித தவருன நடவடிக்கைகளுக்குமிடமின்றி நீதியான முறையில், எவ்வித உள் தலையீடுகளுமின்றி இவ் வேலைவாய்ப்புக்களை வேண்டிய தகைமையை உடையவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் அமைச்சு ஈடுபட்டுள்ளதாக அமைச்சு அறிவித்திருக்கிறது. தராதரங்களை நன்கு பரிசீலித்து குழுவொன்றே இந்த வேலைவாய்ப்புக்களை உரியவர்களுக்கு வழங்கும்.

தவருன முறைகளில் வேலைவாய்ப்புக்களைப் பெறமுடியாது என்றும் ஏமாற்றுக்காரர்களிடம் ஏமாறவேண்டாம் என்றும் தொழில் அமைச்சு பொதுமக்களைக் கேட்டிருக்கிறது. [ம]

## பிரேம் நஸீர் ரூ. 10 ஆயிரம் உதவி

சென்னை, நவ 30
தமிழ்-மலையாள நடிகர் திரு. பிரேம் நஸீர் தமிழ்நாடு வெள்ள, புயல் நிவாரண நிதிக்கு 10 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் இல்லத்துக்கு நேரில் சென்ற திரு. பிரேம் நஸீர், எம். ஜி. ஆரிடம் இப்பணத்துக்கான காசோலையைக் கையளித்தார். (இ)

## ஜே. பி. க்கு பம்பாயில் சத்திரசிகிச்சை

பம்பாய், நவ. 30
இந்திய சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு வலதுகையில் நேற்று சிறிய சத்திரசிகிச்சையொன்று செய்யப்பட்டது.

முன்னர் அமெரிக்காவில் சத்திரசிகிச்சை செய்த இடத்தில் காணப்பட்ட இரத்தக்கட்டி இந்த சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

அவரது உடல்நிலை திருப்திகரமாக உள்ளது என்று டாக்டர்கள் தெரிவித்தனர். (இ)

## சிகரட்டால் 3 லட்சத்து 25 ஆயிரம் பேர் பலி!

வாஷிங்டன், நவ. 30
சிகரட் புகைப்பதனல் அமெரிக்காவில் வருடாந்தம் 3 லட்சத்து 25 ஆயிரம் பேர் பலியாகின்றனர் என்று வாஷிங்டனில் இருந்து வெளிவந்த புள்ளிவிபரம்ஒன்று தெரிவிக்கின்றது (இ)

# 'தேர்தல்காலவாக்குறுதிக்கு மாருக செயற்படோம்'

— வட்டு. எம்.பி.

(காரைநகர்)
''தேர்தல் வேளைநாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு மாருகச் செயற்படமாட்டோம்'' என்று வட்டுக்கோட்டை எம்.பி திரு. தா. திருநாவுக்கரசு தமது அலுவலகம் ஒன்றினை காரைநகரில் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் காரைநகரில் கைத்தொழில், கமத்தொழில் கடற்றெழில் அபிவிருத்திக்கு நான் உதவுவேன் அரசை மட்டும் நம்பியிருக்கக்கூடாது என்றுர். (உ)

## ஆந்திர புயலினுல் 70 லட்சம் பேர் பாதிப்பு!

ஜெனிவா, நவ. 30
ஆந்திரப்பிரதேசத்தில் அண்மையில் வீசிய பயங்கரசூறுவளியினுல் 70 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 20 லட்சம் பேர் வீடிழந்துள்ளனர் என்றும் ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. (இ)

## உணவை ஒறுத்து வெள்ள நிவாரணம்

திருச்சி, நவ. 30
திருச்சி சிறையில் சிறைவைக்கப்பட்டுள்ள தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் தமது ஒரு நாள் உணவை உண்ணுது அதற்கான பணத்தை வெள்ள நிவாரண நிதிக்கு அனுப்பி வைத்துள்ளனர். [கி-இ]

## கருணுநிதி சிறையிலிருந்து அனுதாபம்

சென்னை, நவ. 30
முன்னுள் தமிழக முதல்வரும் தி. மு. க. தலைவருமான கலைஞர் கருணுநிதி சென்னை சிறையில் இருந்தவாறே ஆந்திர முதல்வருக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்தார்.

ஆந்திர மக்கள் வரலாறு காணுத முறையில் இயற்கையின் தாக்குதலுக்கு இரையாகியமைக்கு தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ள கருணுநிதி ஆந்திர மக்களின் துயரத்தில் தமிழ் நாட்டு மக்களுக்கும் பங்கு உண்டென இவ்வனுதாபச் செய்தியில் கூறியுள்ளார். [கி இ]

# கட்டாய பாடப்புத்தகங்கள்: 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு!

(கொழும்பு)
கல்வி வெளியீட்டுத்திணைக்களம் 1-ந் தரத்திலிருந்து 9ந் தரம் வரையிலான கட்டாயபாடப் புத்தங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக 20 லட்சம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

1978-ம் ஆண்டு க பொ. த. பரீட்சை 1979-ம்ஆண்டு க. பொ'த.உயர் தரப்பரீட்சை ஆகியவற்றுக்கான பாடநூல்களைத் தயாரிக்கும் வேலைகளும் அமைச்சில் நடைபெற்றுகின்றன.

இப் பாடநூல்களின் விலைகளைக் கணிசமான அளவு குறைப்பது பற்றி மந்திரிசபை ஆலோசிக்கவிருக்கிறது. (ம-இ]


## யாழ் லயன்ஸ் கழகம்

## நத்தார் — புதுவருட வாழ்த்து சித்திரப் போட்டி

நிபந்தனைகள்

வாழ்த்து மடலின் அளவு: $3\frac{1}{2} \times 5\frac{1}{2}$ (மடிக்கப்பட்டது)
கடதாசி: தடித்த வெள்ளை போட் அல்லது ட்ரோயிங் பேப்பர் வர்ணம் தீட்டுவதற்கு வாட்டர் கலர், கிறேயன், பெயிண்டிங் ஸ்டிக்ஸ் ஆகியன பாவிக்கலாம்

பிரவேசக் கட்டணம் ரூபா 1/-

முடிவு திகதி 15-12-77

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் ஒரு ரூபா காசுக் கட்டளையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

காரியதரிசி, யாழ். லயன்ஸ்கழகம்
சிலோன் மேர்ச்சன்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## மரநடுகையில் யூனியன் மாணவர்கள்

(மாவிட்டபுரம்)
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தேசிய உயர்கல்வித் தராதரப் பத்திரவகுப்பு செய்திட்ட மாணவர்கள் தெல்லிப்பழை கிழக்கு பாரதி சன சமூகநிலைய வளவில் பயன்தருமரங்களை நாட்டும் பணியில் ஈடுபட்டனர்.

கல்லூரி அதிபர் திரு. த. நடராசா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் கிவதர்மவள்ளல் க கனகராசா கலந்து கொண்டு மரம்நாட்டு வைபவத்தை ஆரம்பித்துவைத்தார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசிரியர் திரு. சின்னத்துரை ஆகியோர் உரையாற்றினர். (அ]

## முதிரைமர விற்பனை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
அரசாங்கத்தின் உத்தரவை அடுத்து யாழ்ப்பாண அரச மரக்கூட்டுத்தாபனம் முதிரை மரவிற்பனையை நிறுத்தி உள்ளது. இதனுல் தமிழ்ப்பகுதிகளில் புதிதாக வீடுகட்டுபவர்கள் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட வடபகுதியில் எந்த அரச மரக்கூட்டுத்தாபனத்திலாவது முதிரைமரம் கையிருப்பில் இருந்தாலும், அவற்றை மொறட்டுவவுக்குத் திருப்பி அனுப்பிவைக்குப்படி இவ் உத்தரவில் கூறப்பட்டுள்ளதாம். [கி-அ]

### மாவட்ட மந்திரி பதவியும் கூட்டணியும்

# செல்வா, ஜி. ஜி. இன்றிருந்தால் நிச்சயம் ஆதரிப்பார்கள்

மாவட்ட மந்திரிப் பதவி பற்றி சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் தெரிவித்ததாவது: மாவட்ட மந்திரிப் பதவிகளைத் தமிழ்ப்பிரதேச அபிவிருத்திக்காகத் தமிழ் எம். பி.க்கள் ஏற்கவேண்டும். தமிழ் ஈழத்தை அடைவதுதான் தமிழரின் இறுதிமூச்சாக இருந்தாலும், அது ஒரு நீண்டகாலத் திட்டமாகவே அமையும். உடனடியான தேவைகள் நம்மை எதிர்நோக்கியுள்ளதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழ் ஈழத்தை நாம் மலரச் செய்வதற்குத் தமிழ்ப்பிரதேசத்தில் சில முக்கிய அபிவிருத்தி வேலைகளைச் செய்யவேண்டும். அதற்கு மாவட்ட மந்திரிப்பதவிகள் அவசியமாகும்.

தமிழ் ஈழத்தில் சகல பிரிவுகளையும் கொண்ட பூரணபல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கவேண்டும். வளாகத்தினால் மட்டும் நமது கல்வித் தேவையைப் பூர்த்தி செய்துவிட முடியாது. மண்டைதீவிலுள்ள உபஅஞ்சல் நிலையத்தினால் எமக்குப் பயனில்லை. பூரண வானொலி நிலையம் ஒன்றை அரசின் உதவியுடன் அமைக்கவேண்டும்.

ஆஸ்பத்திரிகள் நவீனமயமாக்கப்படவேண்டும். தமிழ்ப் பிரதேசத்திலுள்ள ஆஸ்பத்திரிகளில், நீரடைப்புமனைசல கூடங்கள் அமைப்பதுடன், மின்சாரக்கட்டட வசதிகள் செய்யப்படவேண்டும்.

தமிழ்ப் பிரதேசத்தில் விவசாயத்தையும், கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்யவேண்டும்.

கல்லூரிகள் யாவற்றிலும், விஞ்ஞான கூடங்கள், விடுதிகள், வகுப்பறைகள் அமைக்கவேண்டும்.

தேவையான கிராமங்களில், உப-தபால் நிலையங்கள், நீதிமன்றங்கள், அமைப்பதுடன், முக்கிய ஒழுங்கைகளை வீதியாக்கி, சகல கிராமங்களுக்கும் மின்சாரவசதி பெறவேண்டும்.

தமிழ்ப் பிரதேசத்துக்குப் புறம்பான ஒரு மின்சாரத்திட்டம் அமைத்துச் செயல்படவேண்டும்.

இதற்கெல்லாம் இன்றுள்ள சூழ்நிலையில், நாம் அரசாங்க உதவியை நாடவேண்டியநிலையில் இருக்கின்றோம். இந்தநிலையில் மாவட்டமந்திரி பதவிகள் பெரும் வாய்ப்பாக அமையும்.

உணர்ச்சிப்பேச்சுக்களாலும் நீண்ட தீர்மானங்களாலும், அறிக்கைகளாலும் நமது லட்சியத்தை அடைய முடியாது. இதற்கு ராஜதந்திரம் அவசியம்.

அரசியல்வாதி யொருவர் தமது சமூகத்திற்குச் சேவையாற்றவேண்டும் எனஎண்ணங்கொண்டிருந்தால், அவரது வாழ்நாளில், இயன்றளவு சேவையைச் செய்யவேண்டும். வருங்காலச் சந்ததியினருக்கு நாம் பிரச்னைகளை வைத்து விட்டுச்செல்வது சரியல்ல.

தமிழ்ஈழம் காணும்வரை, நாம் நமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்குத் தென்பகுதியிலுள்ள முற்போக்குச்சக்திகளின் உதவிகளைப்பெற்று எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

அரசாங்கம் இடதுசாரியாக இருந்தாலென்ன, வலதுசாரியாக இருந்தாலென்ன தமிழ் மக்கள் அரசின்ஒத்துழைப்பை பெற்று தமிழ் பகுதியை அபிவிருத்திசெய்யவேண்டும். இது தமிழினத்திற்குச் செய்யும் மிகப்பெரிய சேவையாகும்.

### ஜி. ஜி., செல்வா இன்றிருந்தால்......

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் இன்று உயிரோடு இருந்திருந்தால், நிச்சயம் மாவட்ட மந்திரி பதவிகளை ஏற்கவேண்டும் என்ற கருத்தையே தெரிவித்திருப்பார்.

தமிழ்மகன் ஒருவர் மந்திரி சபையில் இருந்தால்தான், மாவட்டசபைகளை அமைப்பதற்கு வழிவகுப்பார் என்பதை உணர்ந்த அமரர் செல்வநாயகம், தேசியஅரசாங்கத்தில் அமரர் திருச்செல்வத்தை மந்திரிப்பதவி ஏற்பதற்கு அனுமதிவழங்கினார். அமரர் செல்வநாயகம்கூட இன்று உயிருடன் இருந்திருந்தால், தமிழ்ஈழ அபிவிருத்திக்காக, மாவட்ட மந்திரி பதவிகளை ஏற்கவேண்டும் என்ற கருத்தையே ஆதரித்திருப்பார் என நம்புகின்றேன்.

### விநோதன் கருத்து

சட்டத்தரணி கு. விநோதன் கூறியதாவது:- கடந்த அரசாங்க காலத்தில் தமிழ்ப் பிரதேசம் வளர்ச்சியடைந்தது. பெருந்தொகையான தமிழ் வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் சாதிப்பதற்கு, அரசியல் அதிகாரி பதவி ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது. தமிழ் மாவட்ட அரசியல் அதிகாரிகள் தங்கள் பிரதேச அபிவிருத்திக்கான திட்டங்களை வகுத்துச் செயல்பட்டார்கள். இதன் மூலம் எத்தனையோ புதிய பாடசாலைக் கட்டடங்கள் உருவாகின. புதிய வீதிகள் திறக்கப்பட்டன. மற்றும் பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டன. தபால் நிலையங்கள், நவீன சந்தைகள் கட்டப்பட்டன.

கூட்டணியினர் இன்று எதிர்க்கட்சிப் பதவியை ஏற்றுக்கொண்டுவிட்டனர். அது மட்டுமல்ல, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களில் அரைவாசி இடங்கள்மட்டுமல்ல, முழு இடங்களும், தங்களுக்குத் தேவையெனப் போராடிவருகின்றனர். கூட்டணி ஆட்சிமன்றக் குழுவினரே, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் முழு பதவிகள் முழுவதும் தங்களுக்கு வழங்கவேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். கடற்றொழிலாளர் சங்கப் பதவிகளுக்கும் சிபார்சு செய்துள்ளனர். இவை தவிர மற்றும் பல பதவிகளுக்குக் கூட்டணியினர் தங்கள் ஆதரவாளர்களைச் சிபார்சு செய்துள்ளனர். இந்த நிலையில் மாவட்ட மந்திரி பதவியை ஏற்பதில் தவறில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்காமல்விட்டிருந்தால், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பதவிகளைத் தேடிப் போகாமல்விட்டிருந்தால், மாவட்ட மந்திரி பதவியை ஏற்காமல் விடலாம். அதில் எவரும் குறை சொல்ல இடமில்லை.

### ஏன் ஏற்கக் கூடாது

தற்பொழுது மேயர் பதவிக்கும், நகரசபை, கிராமசபைத் தலைவர் பதவிக்கும் போட்டி போட்டுக்கொண்டு பட்டியல் தயாரித்துவருகின்றார்கள். இப்பதவிகள். ஒரு நகரத்தையோ அல்லது கிராமத்தையோ அபிவிருத்தி செய்யவே உதவியாக இருக்கும். ஆனால் மாவட்ட மந்திரி பதவி, குறிப்பாக யாழ். மாவட்ட மந்திரி பதவி 11 தொகுதிகளையும் அபிவிருத்தி செய்ய உதவக்கூடியதாக இருக்கும். மேயர் பதவியையும், கிராமசபைத் தலைவர் பதவியையும், அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு, ஏற்கலாமென்றால் மாவட்டத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு ஏன் மாவட்ட மந்திரி பதவியை ஏற்கக் கூடாது.

சிறுசிறு அபிவிருத்தி வேலைக்காகக் கொழும்பு சென்று மந்திரிமாரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும், நிலைமை, மாவட்ட மந்திரியை ஏற்றால் இருக்காது. மாவட்ட மந்திரியே நேரடியாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் தொலைபேசி மூலமே பேசி, அந்த மாவட்டத்தின் தேவைகள் பற்றிய பிரச்னையை உடனடியாக தீர்த்துக்கொள்ளலாம்.

தமிழ்ப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் தமிழ் இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும், மாவட்டமந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை. (அ)

[மாவட்ட மந்திரிப் பதவிகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் ஏற்பது நன்மையா அல்லவா என்பது பற்றி 29—11—77 திகதி 'ஈழநாடு' இதழில் சட்டத்தரணிகள் ஆர். பாலசுப்பிரமணியமும், கே. சற்குருநாதனும் கருத்துத்தெரிவித்திருந்தனர். சட்டத்தரணிகள் கு. விநோதனும், கே. வி. எஸ். சண்முகநாதனும் இது பற்றிய தமது கருத்தை இன்றைய இதழில் தருகிறார்கள். வாசகர்கள் இது பற்றிச் சுருக்கமாக எழுதி அனுப்பும் கருத்துக்கள் இங்கு பிரசுரமாகும்-ஆ-ர்.]

# நம்பிக்கை மோசடி வழக்கில் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய நியமனம் பெற்றுத் தருவதற்காக1250ரூபா பெற்று நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிவிடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில், நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் விசாரணைசெய்து தீர்ப்புவழங்கினார்.

இவ்வழக்கில் 3-5-73 க்கும், 2-5-74 க்கு மிடையில் திருமதி புனிதவதி என்பவரை ஏமாற்றி மோசடி செய்ததாகவும், 1250 ரூபா பெற்று நம்பிக்கை மோசடி செய்ததாகவும், வேம்படி மகளிர் கல்லூரியில் உதவி ஆசிரியையாக நியமிக்கப்பட்டதென்று போலி நியமனப் பத்திரத்தை பாவிக்கச்செய்ததாகவும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கணேசரத்தினம் என்பவர் மீது குற்றச்சாட்டப்பட்டிருந்தது.

சான்றுப் பொருட்களான நியமனப்பத்திரம், பற்றுச்சீட்டுகள் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்படவில்லையெனத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சான்றுப் பொருளான சேலையை எதிரி கோரவில்லையாதலால் வழக்காளிக்கு வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானார். (க-அ)

# கொழும்பு மாநகரசபையை யாழ்ப்பாணமும் பின்பற்றுக

(யாழ்ப்பாணம்)

"கொழும்பு மாநகரசபையின் தேர்ச்சி பெறாத தொழிலாளர்களுக்கு எல். பி. டி. சில்வா கமிஷன் அறிக்கையின் படியிலான சகல சலுகைகளையும் அளிக்க கொழும்பு மாநகரசபை ஒத்துக்கொண்டுள்ளது. இதேவிதமான சலுகைகளை கொழும்பு மாநகர சபையை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கை பூராவிலுமுள்ள உள்ளூராட்சித் தொழிலாளர்கள் கோரவேண்டும்"

இவ்வாறு உள்ளூராட்சி மன்றங்களின் தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. ரீ. டபிள்யூ. பெரேரா தனது கிளைச் சங்கங்களுக்கு அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு எழுதுவதோடு பிரதியை உள்ளூராட்சி அமைச்சருக்கும், உள்ளூராட்சி இயக்குநருக்கும் அனுப்பும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படிசங்க யாழ். மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். இராசதுரை யாழ்ப்பாண மாநகரசபையின் விசேஷ ஆணையாளருக்கு எல். பி. டி. சில்வாகமிஷன் சிபார்சுசெய்திருக்கும் சலுகைகளை கொழும்பு மாநகரசபையை முன்னோடியாகக் கொண்டு யாழ்ப்பாண மாநகரசபையிலுள்ள தேர்ச்சி பெறாத ஊழியர்களுக்கும் அளிக்கும்படி கோரும் மனுவொன்றை அனுப்பிவைத்துள்ளார். (கூ-அ)

# "தோட்டப்பாடசாலைச் சேவையை பென்சனுக்குச் சேர்க்கவும்"

(யாழ்ப்பாணம்)

தோட்டப் பாடசாலைகளில் தாம் ஆற்றிய சேவைக்காலத்தைப் பென்சனுக்குச் சேர்க்குமாறு கோரும் தீர்மானம் ஒன்றை இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தினர் நிறைவேற்றியுள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் 3-வது வருடாந்தக் கூட்டம் யாழ். நாவலர் மகாவித்தியாலயத்தில் திரு. ம. க நடராஜா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

"தோட்டப் பாடசாலைகள் அனைத்தையும் அரசு பொறுப்பேற்க வேண்டும்.

"தோட்டப் பாடசாலையில் சேவைசெய்த சகல ஆசிரியர்களுக்கும் 60 வயதுவரைசேவை நீடிப்பு வழங்கவேண்டும்.

"சுவீகரிக்கப்பட்ட தோட்டப்பாடசாலை ஆசிரியர்களைச் சொந்த மாவட்டங்களுக்கு பொது இடமாற்றத் திட்டத்தின்படி மாற்றுக.

"தோட்டப் பாடசாலையில் 10 வருடங்களுக்குமேல் பணியாற்றியவர்களுக்கு 3ம் தர அதிபர்களாகப் பதவி உயர்வு வழங்குக.

"500 ரூபா அடிப்படைச் சம்பளம் பெறுபவருடைய கூட்பன்களை மட்டும் எடுக்கவும்! 300-க்கு மேல் சம்பளம் பெறுபவர் விடயத்தில் அவரது கூப்பனைமட்டும் எடுக்கவும்.

"ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இருந்து வெளியேறுபவர்களைத் தகுதியின் அடிப்படையில் வெளிமாவட்டங்களில் நியமிக்கவும்."

இக்கூட்ட முடிவில் பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ம. க நடராஜா, உப தலைவர் ச. தியாகராஜா, செயலாளர் இ. சுப்பிரமணியம், உபசெயலாளர் செ. அப்புத்துரை, தனாதிகாரி ச. நல்லையா நிர்வாகிகள் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. [கா-அ]

## கூட்டுறவு கடற்றொழில் சங்கம்

(காரைநகர்)

காரைநகர்வடக்கில் ஸ்ரீதேவி கூட்டுறவு கடற்றொழில சங்கத்தை வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. திருநாவுக்கரசு அங்குரார்ப்பணம்செய்துவைத்தார்.

அவர் அங்குபேசுகையில் 'மீனவர்வாழ்வு வளம்பெற பாடுபடுவன்' என்று உறுதியளித்

[5-ம் பக்கம் பார்க்க]

## வட இலங்கை விவசாயிகட்கோர் நற்செய்தி

★ செத்தல் மிளகாய் ★ வெங்காயம் ★ உருளைக்கிழங்கு ★ கடலை ★ பயறு வகை போன்ற உங்களின் உற்பத்திப் பொருட்களைக் கொழும்பில் கூடிய விலையில் விற்றுக்கொடுப்பதற்கு

நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்:

# அரசன் கொம்பனி

72 ஏ, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 29407

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
MAXIMILIAN SCHELL...DIANE BAKER
in
"Karakatoa East of Java"
Cinerama wide screen 70 m. m. [Techni color]

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

RIO (Jaffna) Daily 10-30 4-45 7-15&9-45 P. M.
THE RAILWAY CHILDREN
(Wonderful Family Entertainment)
Special school shows at 1-30 P. M. by prior arrangement.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

8-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, ஜெயசித்திரா
நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ (யாழ். நகர்)
எம். ஜி. ஆர். — லதா நடித்த
போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

## "கிராம அபிவிருத்திக்கு அதிகவாய்ப்பு"

[மாவிட்டபுரம்]

"முன்னர் போலல்லாது இனிமே கிராம அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவதற்காக கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு அதிக வசதிகளும், வாய்ப்புகளும் அளிக்கப்பட இருக்கின்றன. ஆகவே கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் யாவரும் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும். அவர்களது ஆர்வத்திலேயே கிராமத்தின் அபிவிருத்தி தங்கியுள்ளது" என்று கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் வலி. வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. க. சிவரத்தினம் கூறினார். சங்கத் தலைவர் திரு மு. வைரவப்பிள்ளை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்துபேசுகையில் வரும் ஜனவரி மாதத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்களது நடைமுறைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகக் கூறினார்.

மற்றும் பலர் உரையாற்றினர்.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்; தலைவர் திரு. மு. வைரவப்பிள்ளை, உபதலைவர்கள் திரு. நா. சிவராசலிங்கம், திரு அ. விநாயகமூர்த்தி செயலாளர் வை. சந்திரபாலன், உபகாரியதரிசி சு. கணேசலிங்கம் தனாதிகாரி ஆ. விஸ்வகுமார் 9பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவானது. [அ]

## கூட்டுறவு—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தாபி. இச்சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள் திரு. நா. திருநாவுக்கரசு எம். பி., திரு. கா. பொ. இரத்தினம் எம். பி.; தலைவர் திரு. வி. குமாரவேலு, செயலாளர் திரு. கி. சிவமணி, பொருளாளர் திரு. ச. அரியபுத்திரன் செயற்குழு உறுப்பினர்களாக எண்மர் தெரிவாகினர். [உ]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
ரவிச்சந்திரன் — லதா
வீட்டுக்குவந்த மருமகள்

4-ந் திகதி வரை
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

"பொலிஸ் நிலையக்கொலை வழக்கு

## மூன்று எதிரிகள் பொலிஸ் உடை அணிந்திருந்தனர்"

[குருநாகல்]

"முதலாம் இரண்டாம் மூன்றும் எதிரிகள் பொலிஸ் உடை அணிந்திருந்தார்கள்" என்று பொலநறுவா பொலிஸ் நிலைய கொலைவழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் கான்ஸ்டபிள் டீ. டபிள்யூ ஹரிச்சந்திரா கூறினார்.

இவ்வழக்கு குருநாகல் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜஸ்டின் எஸ். அபயவர்த்தன முன்னிலையில் நடைபெற்றது

இவ்வழக்கில், பொலநறுவ இன்ஸ்பெக்டர் ஜெம்பதி ராசபக்ஷா, பொலிஸ் சார்ஜன் கே கிரிபண்டா, கன்ஸ்டபிள் ஏ. ஏ. பந்துவேலு, பொலிஸ் சாரதி கே. கருணதிலகா ஆகியோர். பொலநறுவையை சேர்ந்த டெ மாட்டின் ரணசிங்காவை கொலைசெய்த தாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முதலாம், நாலாம் எதிரி சார்பில் சட்டத்தரணிகளான தயாபெரேரா, ரி. விக்கிரமசிங்கா, ஏ. ரி. அரியரத்தின ஆகியோரும் இரண்டாம் எதிரிசார்பில் சட்டத்தரணி விக்கிரமசிங்காவும், மூன்றும் எதிரிசார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலமும் (ஜூனியர்) ஆஜரானார்கள் பிரதி பகிரங்க வழக்கு தொடுநர் திரு. எஸ். சிவராசா, சட்டத்தரணி மோசஸ் பெர்னாண்டோ, ஆகியோர் வழக்கை நடத்தினர்.

கன்ஸ்டபிள் ஹரிச்சந்திரா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: பொலநறுவ பொலிஸ்நிலைய பிரதான வாசல் இரவு 8மணிக்கு பூட்டப்பட்டுவிடும். பொலிஸ் ஜீப் வெளியில் செல்வதற்கு யார் கதவைத் திறந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. இரவு 10 மணிக்கு ஜீப்வண்டி திரும்பிவந்தது அப்போது ஜீப் வண்டிக்குள் வேறு ஒருவரும் இருந்தார். ஜீப் வண்டி' பொலிஸ் நிலைய வாசலிலிருந்து 20 யாருக்கு அப்பால் நிறுத்தப்பட்டது. ஜீப்பிலிருந்தவர்கள் இறங்கி உள்ளே சென்றனர். ஜீப்பில் வந்தமற்றொருவருக்கு என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. ஜீப்மீண்டும் ஒரு தடவை சென்றது என்பதும் எனக்குத் தெரியாது"

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## பாட்மின்ரன் சுற்றுப்போட்டி: மானிப்பாய் இந்து சாதனை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான யாழ்மாவட்ட பாட்மின்ரன் சுற்றுப்போட்டியில் மூன்று பிரிவுகளிலும் மானிப்பாய் இந்துக்கல்லூரி சாம்பியனாகியது.

இச் சுற்றுப்போட்டி மானிப்பாய் கட்கின்சன் மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

வடமாகாண பாட்மின்ரன் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து யாழ். இந்துக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி யாழ். பரியோவான கல்லூரி ஆகியன கலந்து கொண்டன. [அ]

## வவுனியாவில் பஸ் டிப்போ விரைவில் நிறுவப்படும்

[வவுனியா]

கடந்த 7வருட காலமாக முடிவு பெறுதிருந்த இலங்கை போக்குவரத்துசபை வவுனியா டிப்போ வெகுவிரைவில் திறக்கப்பட இருக்கிறது.

இந்த டிப்போ திறக்கப்பட்டதும் வவுனியா பஸ் சேவையில் திருப்திகரமான மாற்றம் ஏற்படுத்தப்படும் என வவுனியா தேசிய பேரவை உறுப்பினர் திரு. தா சிவசிதம்பரம் நம்பிக்கை தெரிவித்தார்.

திரு. தா. சிவசிதம்பரமும், அநுராதபுரம் இ. போ. ச. பிரதேச கட்டுப்பாட்டதிகாரியுமான திரு. வீரக்கோனும் எடுத்த தீவிர முயற்சியினால் வவுனியா டிப்போவுக்கான மின்விநியோகம் இணைக்கப்பட்டுள்ளது. இந்த டிப்போவின் கட்டிடத்திற்கான அடிக்கல் கடந்த 7வருடத்துக்குமுன் திரு. தா. சிவசிதம்பரத்தினால் நாட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## கம்பளை சாஹிரா வெற்றி

[கம்பளை]

அகில இலங்கை 'பொலிஸ் கடேற்' 5வது வருடாந்த பாசறை நிகழ்ச்சிகளில் கம்பளை சாஹிரா கல்லூரி பொலிஸ் கடேற்'றினர் பல பரிசில்களைத் தட்டிக்கொண்டனர்.

தேகப் பயிற்சியில் 2-வது இடத்தையும்சிறந்த 'சார்ஜன்' போட்டியில் மேற்படி கல்லூரியைச் சேர்ந்த 'மன்சில் பூரா' 2வது இடத்தையும் பொது அறிவில் 3வது இடத்தையும் பெற்றனர்.

பொலிஸ் கடேற் பயிற்சியாளர்களான ஆசிரியர்கள் ஜனாப் எம். எஸ். சாஹுல்ஹமீது, ஜனாப் பீ. எச். ரூல் ஆகியோர் இவர்களுக்குப் பயிற்சியளித்தனர். (உ

## வழக்கம்போல் பஸ் சேவை

[மட்டுவில்]

சாவகச்சேரிதொகுதியில் சில பகுதிகளில் கடந்த சில நாட்களாக நடைபெறுமலிருந்துவந்தி பஸ் சேவை சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினத்தின் தலையீட்டினால் நேற்றுமுதல் தொடர்ந்து வழக்கம் போல் நடைபெற்று வருகிறது.

## சேவை நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

இவ்வருடத்துடன் ஒய்வு பெறவிருந்த யாழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு' ஜே. அரியரத்தினத்தின் சேவை நீடிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை வடமாநிலவித்தியாபதி திரு. தி மாணிக்கவாசகர் தெரிவித்தார் [அ]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
அன்னமிட்ட கை

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — ஜெயலலிதா (இருவேடங்கள்)
வந்தாளே மகராசி
(புத்தம் புதிய பிரதி)

### மணிவாக்கு

சிந்தனைக்கெட்டாதவொன்றைப்பற்றித் தர்க்கிப்பது பயனற்ற செயலன்றி வேறு யாதாகும்.

—சாந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## அகதிகள் பிரச்னை

1977-ம் வருடத்திய இலங்கையின் இனக்கலவரத்துக்கு யார் காரணம்; எவரால் இது ஏற்பட்டது; எதற்காக இது நிகழ்ந்தது என்ற ஆராய்ச்சிகள் இன்னமும் முற்றாகத் தீர்மானிக்கப்படாத விஷயங்களாக இருக்கின்றன.

இதுபற்றி விசாரணைசெய்வதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கலவரங்களுக்கும் பொலிசாருக்கும் தொடர்பிருக்கின்றதா என்பது பற்றியும், எந்த விதத்தில் இக்கலவரங்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பிருந்தன; பொலிசார் உரியநேரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தார்களா; இல்லையா என்பது பற்றியெல்லாம் பொலிஸ்பகுதியினர் தமக்குள் சிலசில அதிகாரிகளை நியமித்து விசாரணை செய்து வருகின்றனர்.

அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுவின் கடமைகளும் அவர்களுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகளும் வேறு.

அந்தந்த இலாகாக்களில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் வேறு.

இந்தவகையில் பொலிஸ் தலைமைப் பகுதியினர் தங்கள் சேவையிலுள்ள தவறுகளைக் கண்டுபிடித்துத் தூய்மைப் படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுப்பது நியாயம்.

இதேபோல் இதர அரசாங்க அலுவலகங்களும் தங்கள் தங்கள் பகுதிகளில் நடந்த சம்பவங்களைப்பற்றி விசாரணை செய்து தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்வது எவ்வளவோ நன்மை பயக்கும்,

இந்த நடவடிக்கைகள் எவ்வாறிருப்பினும் கலவரத்தின்போது உயிர்இழந்தவர்களையும். உற்றாரை இழந்தவரையும், உடமைகளை இழந்தவர்களையும் பற்றி மீண்டும் நாம் இப்பத்தியில் பல தடவைகளிலும் எடுத்துக் கூறி நிவாரணமளிக்கவேண்டிய அவசியம்பற்றியும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இதேபோன்று அகதிகளாக வந்தவர்கள் பற்றியும் எடுத்துக் கூறியிருந்தோம்.

இப்போது அகதிகள் பிரச்னை குறைந்து விட்டதோ குறைக்கப்பட்டு விட்டதோ என்பதோ முக்கியமல்ல.

அகதிகளுக்கு எவ்வாறு நிவாரண மளிக்கப்பட்டது; யார் யார் புகலிடமளித்தார்கள் என்பதும் பிரச்னையல்ல,

தென்னிலங்கையில் பரம்பரையாக வாழ்ந்து வந்தவர்களும் அகதிகளாகி ஒருபோதுமே மிதித்தறியாத வடபகுதி மண்ணில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தவர்களும் உள்ளனர்.

இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தும் இலங்கையர்களென்பதை நிரூபிக்கமுடியாதவர்களுமுள்ளனர்.

இலங்கையராகவுள்ள அகதிகளுக்கே குடியிருப்புத் திட்டத்தில் இடம்; இலங்கையரல்லாதவர்களுக்குத் தனியார் நிலங்களில் வேலைவாய்ப்பு என்ற முறையில் அகதிகள் பிரச்னைக்குத்தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இலங்கையரல்லாதவராயின் அவர்களை அவர்களது சொந்தநாட்டுக்கே அனுப்புவதில் என்ன கஷ்டம்? அவர்களைத் தனியார் பொறுப்பில் விடுவது சுரண்டலுக்கு வழிவகுத்து நாட்டிக்கே கெட்டபெயரை ஏற்படுத்துமே.

இலங்கையரல்லாத அகதிகள் எந்தநாட்டைச் சேர்ந்தவர்களோ அந்த நாட்டைச்சேர்ந்த தூதரகங்கள் இந்தநாட்டில் இன்னமும் தூங்கிக்கொண்டிருக்கிறதா?

எதுவாக இருந்தாலும் அகதிகள் பிரச்னைக்கு மனிதாபிமானத்துடன் தீர்வு காணவேண்டியது மக்கள் கடமை!

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna: Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka

# 'இரசிகமணியின் சாதனை வாழ்வு'

## சாலை இளந்திரையன் இரங்கல்

புதுடில்லி, நவ 30

"வேடிக்கை மனிதர்களைப் போல் பத்தோடு பதினொன்று என்று இல்லாமல் தனித்துப் புகழ் நாட்டி சாதனை வாழ்க்கை வாழ்ந்தவர் கனக செந்திநாதன்.

இவ்வாறு புதுடில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன் இரசிகமணியின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"தமிழ் இலக்கிய விமர்சனத் துறையில் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்தவர் என்று நண்பர் இரசிகமணியை இளைஞர்கள் குறிப்பிடுவது உண்டு. ஆனால் பழமை, புதுமை என்ற பாகுபாட்டுப் பிளவினால் புதியவர்களிடம் அடியோடு வற்றிவரண்டுகொண்டிருந்த இலக்கியச் சுவைப்பு ஆர்வத்துக்குப் புத்துயிர் ஊட்டியவர் என்பதே கனக செந்திநாதரின் தனித்த பெருமை. தமிழ் இலக்கியத்தை மதிப்பிட்டு அறிமுகம் செய்யும் தொண்டிலேயே அவர் தம்முடைய முழு வாழ்வையும் செலவழித்திருக்காவிட்டால், வெளியிலே உள்ளவர்கள் மட்டுமல்ல, ஈழத்துப் புதிய தலைமுறையினர்களும் தங்கள் இலக்கியப் பாரம்பரியத்தை மறந்து, இழந்திருப்பார்கள்!

"தனிப்பட்ட முறையில் இரசிகமணியின் இறப்பு எனக்குப் பெரிய இழப்பாக எழுந்து என் நெஞ்சை அடைக்கிறது; ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றி எந்தத் தகவல் வேண்டும் என்றாலும் எந்தப் புத்தகம் வேண்டும் என்றாலும் இனிமேல் யாரிடம் கேட்பேன்? யார் அவ்வளவு ஆர்வத்தோடும் சுறுசுறுப்போடும் தேடி எடுத்து எனக்கு அனுப்புவார்கள்?" இப்படி நினைக்கின்றபோது, ஈழத் தமிழ் இலக்கியத்தின்பால் தனித்த காதல் கொண்ட என் நெஞ்சம் சோர்ந்து சாம்பிப்போகிறது. என்றாலும் "ஒன்று பழுத்தால் இரண்டு தளிர்க்கும் உறுதியை எண்ணாமல், நான், ஓகோ நித்தம் அநித்தியம் என்றே ஓலம் இடுவேனோ?" என்னும் உறுதி நெறியை எண்ணி ஒரளவு ஆறுதல் அடைகிறேன்; இரசிகமணியின் பரம்பரையினராகச் சிலரேனும் உருவாவார்கள் என்று நம்பி எனக்கு நானே ஆறுதல் சொல்லிக் கொள்ளுகிறேன்." (உ)

## "வட - கிழக்கு குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும்" — வவனியா எம். பி.

[கொழும்பு]

'மகாவலி அபிவிருத்திக்கு அரசு எத்தனையோ கோடி ரூபாய்களைச் செலவு செய்கிறது. ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல குளங்களைப் புனரமைப்பதன் மூலம் இப்பகுதி விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கலாம்'

தேசிய அரசுப் பேரவையில் நேற்று தொடர்ந்து இடம்பெற்ற பட்ஜட் விவாதத்தில் வவனியா தே. அ.பே உறுப்பினர் திரு. த. சிவசிதம்பாம் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாது:

'வவனியாப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட கலவரத்தின் பின் 29 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர், இவர்கள் வவனியாவைச் சேர்ந்தவர்களல்ல, இவர்களுக்கு வவனியா அரசாங்க அதிபர் காணியும், பணமும் வழங்கியுள்ளார், எமக்கு வருகின்ற சுற்று நிருபங்கள் சிங்களத்தில் தான் அனுப்பப்படுகின்றன, அதன்மொழி பெயர்பு அனுப்பப்படுவதில்லை.

'வளர்ந்து வருகின்ற ஒரு நாட்டிற்கு 'ரேஷன்' பங்கீட்டு முறை தேவையில்லை தான் என்பதை நான் ஏற்கிறேன். அதற்காக அந்த முறையைத் திடீர் என்று மாற்றக் கூடாது, இன்னமும் 6 ஆண்டுகள் இருக்கின்றன, எனவே திடீர் என மாற்றியிருக்கக் கூடாது'. [ம]

## மரண அறிவித்தல்

### விஸ்வநாதன் தெய்வேந்திரநாதன் (தேவா)

கோப்பாய் தெற்கைச் சேர்ந்தவரும் மாங்குளம் யந்திர உபகரண வேலைத்தள முகாரியுமான திரு. விஸ்வநாதன் தெய்வேந்திரநாதன் (தேவா) காலமானார். இவர் திருமதி நாகரத்தினத்தின் அன்பு மகனும், எஸ். எஸ் குமார் (பொலிஸ் பகுதி மட்டக்களப்பு) பர்வதபத்தினி, சரஸ்வதி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (1-12-77) இன்று வியாழக்கிழமை மாலை கோப்பாயில் நடைபெறும்.

7802

## மரண அறிவித்தல்

### அப்பாமணி

பிரபல மோட்டோர் சைக்கிள் மெக்கானிக் அப்பாமணி என்று அழைக்கப்படும் ஆறுமுகம் நாகலிங்கம் காலமானார். இவர் மீனாட்சியின் கணவரும், தங்கராசாவின் சகோதரரும், ஞானம்மா, நடராசா, நாகரத்தினம், சந்தானலட்சுமி, பாலசுப்பிரமணியம், காமாட்சி, சிவகுமாரன், சண்முகநாதன், கண்ணம்பாள், ஸ்ரீஸ்கந்தராசா, செல்வராணி ஆகியோரின் தந்தையாரும், கோவிந்தராசா, கதிரவேலு, அன்னம்மை, தியாகராசா கமலம், நாகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், லெட்சுமணை ஆசாரி, காலஞ்சென்ற சுப்பிரமணிய ஆசாரி ஆகியோரின் மைத்துனரும், வளர்மதி, நாகலட்சுமி, நாகராசா, தர்மசீலன், சுமதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமச் சடங்குக்காக கன்னாதிட்டி காளிகோயில் பின்வீதியிலுள்ள இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு இன்று (1-12-77) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

7800

## தொல்பொருள் ஒதுக்கிடமாக பிரகடனம்

[யாழ்ப்பாணம்]

அல்லைப்பிட்டி ஒல்லாந்தர் தேவாலயம் அதற்கண்மையிலுள்ள மான்கைத்திடல் இடிபாடுகள் கொண்ட பிரதேசம் ஆகியவை தொல் பொருள் ஒதுக்கிடமாகப் பிரகடனம் செய்யப்படவிருக்கிறது.

தொல் பொருள் துறை ஆணையாளர் டாக்டர் ஆர். ஏச். டி. சில்வா மீண்டும் அல்லைப்பிட்டிக்கு விஜயம் செய்து சீன மட்பாண்டம் காணப்பட்ட பிரதேசத்தை பார்வையிட்டதுடன் அங்கு மேலும் எடுக்கவேண்டிய நடவடிக்கைபற்றி ஆலோசனை செய்தார். தொல் பொருள் ஆலோசனைப்படியும் அவரின் திட்டப்படியும், தொடர்ந்து அகழ்வாராய்ச்சி வேலைகளைப்பிரதேச அதிகாரி திரு.ம.பொ.செல்வரத்தினம் நடாத்திவருகிறார்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தொல்பொருட் காட்சி நிலையத்தில், அல்லைப்பிட்டியில் எடுத்த உடைந்த சீனமட்பாண்டங்களை ஒன்று சேர்த்துப் பார்வைக்கு வைக்கும் வேலைநடைபெற்றுவருகிறது.

அரசாங்க திரைப்படப் பிரிவினர் அல்லைப்பிட்டி அகழ்வாராய்ச்சிப்பிரதேசத்தையும் எடுக்கப்பட்ட சீன மட்பாண்டங்களையும் படம் பிடித்துள்ளனர். [க-அ]

## கடற்படை வெற்றி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் காரைநகர் கடற்படைக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கடற்படைக் கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கடற்படைக் கோஷ்டிக்கு எல். எஸ். பி ரி. பெரேராவும், தொழில்நுட்ப நிறுவனக் கோஷ்டிக்கு என். ஜெயமும் தலைமைதாங்கினார்கள். (இ)

## நாடும் நடப்பும்

கிறிஸ்மஸ் வாழ்த்து முதல் முதலாக எப்போது அனுப்பத் தொடங்கப்பட்டது; முதல் வாழ்த்துக் கார்ட்டை யார், யாருக்கு அனுப்பினார்?

இவைபற்றி ஆராய்ச்சி செய்திருப்பவர்கள் அவற்றை அனுப்பினால் பலருக்கும் பயன்படக்கூடியதாக வெளியிடுவோம்.

ஃ ஃ ஃ

நத்தார்-புதுவருட வாழ்த்துச் சித்திரப்போட்டியொன்றை யாழ் லயன்ஸ் கழகம் மாணவருக்கென நடாத்துகிறது.

இப்போட்டி பற்றிய விபரம் இன்றைய 'ஈழநாடு' பத்திரிகையின் பிறிதொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சித்திரப்போட்டியில் மிகச்சிறப்பாகப் பரிசுபெறும் சித்திரத்தை சர்வதேச சித்திரப் போட்டிக்கு அனுப்பி வைப்பதற்கும் யாழ் லயன்ஸ் கழகத்தினர் திட்டமிட்டுள்ளனராம்.

ஃ ஃ ஃ

சித்திரம்பற்றிக் குறிப்பிட்டதும் ஓவியக்கலைஞர் திரு. டெனடிக்ன் ஞாபகம் யாருக்கும் எழும்.

கலைகலாசாரக் காப்புக்கழகத்தின் செயலாளராக இருக்கும் இவர் யாழ்ப்பாணம் நல்லூரில் கலை, கலாசார மண்டபம் ஒன்றைப் பிரமாண்டமான முறையில் அமைப்பதற்கு அயராது உழைத்து வருகிறார்

பலநாட்டு அரசியல் தலைவர்கள்; சமயத்தலைவர், சமூகத் தலைவர்கள். கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்விமான்கள் என்ற பலரும் இவரது பேனா ஓவியத்தில அகப்பட்டுள்ளனர். இப்படி அகப்படாதவர்கள் வெகுகுறைவென்றே சொல்லலாம்

இவர் சமீபத்தில் மீண்டும் வெளிநாடுகள் பலவற்றுக்குச் செல்லவிருக்கின்றார்.

யாழ். மேற்றிராணியார் தியோகுப்பிள்ளை ஆண்டகையையும் அவர் இலதினங்களுக்கு முன் சந்தித்து வழமைபோல் ஐந்தாறு நிமிஷங்களில் அவரைஓவியமாக வரைந்தார்.

வெளிநாடு செல்லும்போது ரோமாபுரியில் போப்பாண்டவரையும் ஓவியமாக வரைவதற்கு வாய்ப்புக்கிடைக்குமென அவர் எதிர்பார்க்கிறார்

அவரின் பெருமை யாழ்ப்பாணத்தின் பெருமையல்லா? வாழ்க; வளர்க அவரது ஓவியக்கலை.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள விதை உருளைக்கிழங்குகள் பெரும்பாலும் அழுகிப் போய் புழுநெளிகின்றனவாம். இவற்றை என்ன செய்வதென்று தெரியாமல்விவசாயப் பகுதியினர் திண்டாடுகின்றனர்.

சுமார் எண்பது தொன் உருளைக்கிழங்கு இங்கு அனுப்பப்பட்டதாகவும் இவற்றில் பெருந்தொகையானவை அழுகிக்கெட்டுவிதைப்பதற்கு உதவாமல் போய்விட்டதாகவும் கூறப்படுகிறது.

கிழங்கு விதைக்காவிட்டால் கூடப்பரவாயில்லை; தொற்று நோய் பரவாமல்விட்டால் போதும் என்கிறார் ஓர் அன்பர்!

புழுத்தாலும் அழுகினாலும் சந்தையில் மவுசுதானே!

- ஊர்சுற்றி

## வாசுதேவா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலம் தலைமைவகிப்பார். திரு. சி. கதிரவேலுப்பிள்ளை உட்பட பல கூட்டணி எம்.பிக்கள் உரையாற்றுவார்கள்,

சனிக்கிழமை காலை அளவெட்டியிலுள்ள திரு. வி. பொன்னம்பலம் இல்லத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் திரு. வாசுதேவா கலந்துகொண்டு 'பட்ஜட்' பற்றி உரையாடுவார்கள்,